1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 1969-70 முதல் மார்ச் 1983 வரை, ரூ. 5778.46 இலட்சம் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிட ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடன் பெற்று நகராட்சிகளிலோ அல்லது பேரூராட்சி மன்றங்களிலோதான் இப்படிப்பட்ட குடிநீர் திட்டங்களை செயல்படுத்துகிற முறை இப்போது நடைமுறையில் இருக்கிறதாக நான் அறிகிறேன். கிராமபஞ்சாயத்துகளில் தண்ணீர் கிடைக்காத கிராமங்களாக இருந்தால் 4,5 பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து காப்பீட்டு கழகத்திலிருந்து கடன் பெற்று தொலை தூரத்திலிருந்து வருகிற தண்ணீரை கொடுக்கிற அளவில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூரல் வாட்டர் சப்ளை பொறுத்த வரையில் அதைப் பூராவும் அரசே தன்னுடையச் சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

276—(* வினா எண். 20796) திரு. சி. கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84ல் 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்குப் 'பாதுக்காக்கப்பட்ட குடிநீர்' வழங்க தமிழக அரசுக்கு மைய அரசு உதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 1983-84 ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கென ரூ. 6.94 கோடி மத்திய அரசு வழங்கியுள்ளது. இது தவிர 1983-84ல் ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடி வழங்கியுள்ளது.

[1984 மார்ச் 12

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுக்காக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் போது கேட்டகிரி (category) முறையிலே செயல்படுவதன் காரணமாகவும், பல ஆண்டுகளுக்கு முன்னாலே எடுத்த கணக்குகளின் அடிப் படையில் செயல்படுவதன் காரணமாவும், பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த நிலைமையை கணக்கில் எடுக்கும் போது புதியதாக கணக்கெடுத்து, கேட்டகிரி முறையை மாற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சிக்கல் ஏற்படுவது எல்லாம் ஆறாவது கேட்டகிரியில்தான். ஆறாவது கேட்டகிரி என்றால் ஆண்டு பூராவும் போதுமான அளவிற்கு நல்ல குடி தண்ணீர் இருக்கிறது என்று பொருள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஆண்டு பூராவும் தண்ணீர் இருப்பதில்லை, நல்ல குடிதண்ணீர் இருப்பதில்லை, போதுமான தண்ணீர் இருப்பதில்லை என்று முறையீடு செய்வார்களானால் அது பரிசீலனை செய்யப்பட்டு, பல்வேறு ஹேபிடேஷன்ஸ், குடியிருப்புகள் மூன்றாவது கேட்டகிரியாக மாற்றி அவைகளுக்கு உடனடியாக தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவோ அல்லது மற்ற திட்டங்கள் மூலமாகவோ தண்ணீர் கிடைப்பதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கே ஆறாவது பிரிவாக இருப்பது மூன்றாவது பிரிவாக மாற்றுவது முறையென்று நியாயமாக கருதுகிறார்களோ அதை கலெக்டருக்கோ அல்லது மற்ற தொடர்புடைய அதிகாரிகளுக்கோ முறையீடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 1983 —1984 ஆகிய ஆண்டுகளுக்கு மத்திய அரசு ஊக்குவிப்புத் தொகை யாக 4 கோடி ரூபாய் தருகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்காக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே சிறு நகரங்களிலே இருக்கிற மக்களுக்கு எல்லாம் நீண்ட நெடுங்காலமாக பாதுகாக்கப்பட்ட குடி நீர் கிடைக்காத காரணத்தினால் 20 அம்சத் திட்டத்தின் மூலமாக பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கவேண்டுமென்பது மத்திய அரசின் கொள்கையாக இருக்கிற காரணத்தினால் இந்த 4 கோடி ரூபாய் போதுமானது அல்ல என்பதை அமைச்சர் அவர் கள் அறிவார்கள். ஆகவே இதற்காக குறைந்தது ஒவ்வொரு நிதி யாண்டிலும் 20 அல்லது 25 கோடி ரூபாயாவது தேவை என்ற அளவிலே மாநில அரசு திட்டத்தை வைத்து மத்திய அரசிடம் அதிகமான தொகை கோருவார்களா?

சட்டமன்ற LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, எவ்வளவு தொகை வேண்டுமென்று அவ்வப்போது திட்டம் வகுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறோம். அவர்களும் கொடுத்து வருகிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகள் என்பதன் கீழும் தருகிறார்கள். தருவது போதாது, நாங்கள் கிராமங்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறோம் என்று கேட்கிறோம், அவர்கள் தருகிறார்கள். மறுபடியும் எழுதுகிறோம், தருகிறார்கள். இப்படி புராசஸ் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் 3 கட்டங்களில் முடிந்தபிறகும் கூட இன்னும் சில கிராமங்களிலே குடிநீர் அளிக்கப்படாத நிலைமைஇருக்கிறது. மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தின் மூலமாக ஒதுக்குகிற பணம் இந்தத் திட்டத்திற்காகத் தருகிறது என்றால் அப்படிப்பட்ட இடங்களிலே குடிநீர் வசதி அளிக்கும் திட்டத்தை அதன் மூலமாக நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் நேரிடைத் தொடர்பு இல்லை. ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படவில்லை, விடப்பட்டுப்போய்விட்டது என்ற நிலை இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் முறையீடு செய்வார்களேயானால் அதைப்பற்றி அரசு கவனிக்கும்.

பாலக்கோடு வட்டத்திற்கு தனி நிலவள வங்கி ஏற்படுத்தும் திட்டம்.

277— (*வினா எண் 17416)— திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு வட்டத்திற்கு ஒரு தனி நிலவள வங்கி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசீய வங்கி இவற்றின் ஒப்புதல் கிடைத்த பிறகு ஆரம்பிக்கப்படும்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் சம்மதம் கிடைத்திருந்தும் கூட சென்ற ஆண்டிலிருந்து நிலுவையில் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.